DIOCESAN NEWSLETTER - VELLORE

For Private Circulation Only

VOL.30 | OCTOBER 2026 | NO.10

எல்லா மன்றாட்டுகளிலும் செபமாலையே மிகுந்த அழகும்
பேரளவு அருளும் நிறைந்தாக இருக்கிறது திருத்தந்தை புனிதர் பத்தாம் பயஸ்

"The Rosary is the most beautiful and the richest in graces of all prayers."

Pope Saint Pius X

RCM Teachers' Retirement | 5th | September 2026

Pastoral Visit, Kolappalur | 27th September-2026

Funeral Mass
Rev. Fr. S. Jose Enchakal
25.09.2026

Shepherd's Voice



One in Christ, United in Mission

Dear Rev. Fathers, Sisters, Brothers, and my dear Lay Faithful of the Diocese of Vellore

Greetings of peace and joy in the precious name of our Lord Jesus Christ!

This year, the Church celebrates the 100th World Mission Day with deep gratitude and renewed missionary zeal. Our Holy Father Pope Leo XIV has given us the beautiful theme: **"One in Christ, united in mission."** This theme invites every one of us to return to the heart of Christian life. Mission is not first of all a programme, a collection, an event, or an activity. Mission begins from our union with Christ. When we are one with Him, we become capable of being sent by Him.

Before His Passion, Jesus prayed to the Father: "May they all be one" (Jn 17:21). This prayer of Jesus is at the centre of mission. The world comes to believe not only through our preaching, but also through our communion. A divided Church cannot convincingly proclaim the Gospel of reconciliation. A community wounded by jealousy, competition, indifference, caste divisions, or selfishness weakens its missionary witness. But a family / community/ parish that prays together, forgives together, serves together, and walks together becomes a living sign of Christ.

World Mission Day was instituted by Pope Pius XI in 1926, at the suggestion of the Society for the Propagation of the Faith. Its purpose was to awaken in the whole Church a sense of responsibility for the mission of evangelization. The Pope wanted every Catholic to understand that mission is not the

concern only of missionaries in faraway lands. Mission belongs to the whole Church. Every baptized person is called to be a missionary disciple. Every parish, every family, every school, every institution, every association, and every faithful person has a share in the mission of Christ.

For one hundred years, World Mission Day has helped the Church to pray for missionaries, encourage missionary vocations, support young Churches, and assist the pastoral works of the Universal Church. The offerings collected on this day are used for mission territories, seminaries, catechists, schools, health centres, formation houses, and communities where the Church is still young or materially poor. Therefore, our contribution on World Mission Day is not merely a donation. It is an act of communion. It says that the sufferings, hopes and needs of the Universal Church are also our own.

The theme "One in Christ, united in mission" is especially meaningful for us in the Diocese of Vellore. Our Diocese has been blessed with a rich heritage of faith, built through the sacrifices of missionaries, bishops, priests, religious, catechists, teachers, families and committed lay faithful. The Gospel took root in our land through prayer, service, education, healing, catechesis and humble witness. We remember with gratitude all those who sowed the seeds of faith before us.

Today, this missionary responsibility is placed in our hands. The mission of the Diocese of Vellore is not finished. There are still families that need healing, children who need formation, youth who need direction, the poor who need dignity, the sick who need consolation, and communities that need deeper pastoral care. Mission today is not only going to distant places. It is also going to the person nearby who feels forgotten, to the family that has stopped praying, to the young person who has lost hope, to the poor who feel unseen and to the wounded who wait for compassion.

To be one in Christ means that Christ must be the centre of our personal life, our families, our parishes, our religious communities, and our institutions. Without Christ, mission becomes activism. Without prayer, service becomes routine. Without the Eucharist, our communities lose their spiritual strength. Without the Word of God, our pastoral work loses direction. Therefore, a missionary Diocese must first be a praying Diocese.

To be united in mission means that all of us must walk together. Priests, religious, lay faithful, catechists, teachers, youth, children, elders, parish councils, finance councils, pious associations, and Anbiams all have a role in the mission of the Church. No one should feel excluded. No one should remain passive. The Church grows when every member offers his or her gift for the building up of the Body of Christ.

I earnestly invite all parishes of our Diocese to celebrate World Mission Day 2026 with enthusiasm, creativity, and seriousness. Let it not become a routine Sunday or merely a day for collection. Let it become a day of prayer, awareness, formation, participation, and renewal. Let the faithful be helped to understand the meaning of mission. Let the homilies, catechism classes, youth meetings, children's programmes, parish councils, religious communities, schools, and Anbiams reflect on the theme of this year.

Parishes may organize missionary prayers, rosaries for missionaries, catechesis on the Universal Church, talks on missionary saints, mission exhibitions, children's activities, youth gatherings, and visits to the poor, sick, and elderly. Let the liturgy be prepared well with meaningful introductions, prayers of the faithful, hymns, and participation of different groups. Let children and young people be taught that the Church is larger than their own parish and that they too are responsible for the Gospel.

I also encourage our families to become missionary homes. A family becomes missionary when parents teach children to pray, when the Bible is read at home, when forgiveness is practised, when the poor are remembered, and when faith is lived with joy. Our schools and colleges must form students not only for success, but also for service. Our Catholic institutions must continue to be places where the compassion of Christ is made visible through education, health care, social service, and human formation.

The world today needs the Gospel. It needs peace where there is violence, unity where there is division, hope where there is despair, truth where there is confusion, dignity where there is exploitation, and love where there is indifference. The Lord sends us into this world not with fear, but with faith. He does not ask everyone to cross oceans, but He asks everyone to cross the distance between indifference and compassion, between comfort and service, between isolation and communion.

As we celebrate the 100th World Mission Day, let us renew our baptismal commitment. Let every parish in the Diocese of Vellore become missionary. Let every family become missionary. Let every institution become missionary. Let every heart become missionary.

May Mary, Star of Evangelization, accompany all missionaries and intercede for our Diocese. May Saint Thomas the Apostle and all missionary saints inspire us with courage. May the Holy Spirit make us truly one in Christ and united in mission.

With mercy and hope,

+ **Ambrose Pitchaimuthu**
Bishop of Vellore

BISHOP'S PROGRAMME

02	Fri	E	Holy Mass, Achirapakkam Shrine
04	Sun	E	Jesuit Provincial Visit, Vellore
05-12			Bishops' Joint Reflection Programme, Musoorie
13	Tue	M	Don. Antonio Visit, Vellore
17	Sat	M	Silver Jubilee, St. Joseph's Convent, Arni
18	Sun	M	Apostolate in the Modern World, Sneha Deepam
		E	Marian Convention (Legion of Mary), Chetpet
19	Mon	M	Silver Jubilee, Grace and Compassion Convent, Tiruvannamalai
20	Tue	M	Adoration Monastery, Rangapuram
24	Sat	M	Mesiyavin Aanmiga Maiyam, Agaramcherry
25	Sun	M	Salesian Sisters Chapter, Kodampakkam
		E	Renovated Church Consecration, Alapakkam
28	Wed	M	Monthly Recollection & VSSS Building Blessing, Sathuvachary
29-30			Executive Committee meeting - Prison Ministry, Tanjavur

Calendar

01	Thu	St. Therese of the Child Jesus, Vir., Dr., Feast
02	Fri	The Holy Guardian Angels, Mem
04	Sun	27th Sunday in Ordinary Time
07	Wed	Our Lady of Holy Rosary, Feast
11	Sun	28th Sunday in Ordinary time
15	Thu	St. Teresa of Avila Vir., Dr., Mem
17	Sat	St. Ignatius of Antioch Bp., M. Mem
18	Sun	29th Sunday in Ordinary Time (Mission Sunday)
20	Tue	St. Paul of the Cross pr., Rf.
22	Thu	St. John Paul II., PP.
25	Sun	30th Sunday in Ordinary Time
28	Wed	SS. Simon and Jude App., Feast

VICAR GENERAL OFFICE

Dear Rev. Fathers, Greetings in Jesus.

Please note that October monthly recollection will be held at St. Joseph's Church Hall, Sathuacharry on 28, Wednesday.

Program :

9.45	-	Arrival
10.00	-	Talk
11.15	-	Blessing of the Renovated VSSS Building and Tea Break
11.45	-	Adoration and confessions
12.45	-	Announcements
01.00	-	Lunch

Note : After the lunch, there will be Senate Gathering at group level.

ANNUAL RETREAT

This year's Annual Retreat for us will be held at Velankanni Retreat Centre, in November from 8th Sunday 8 pm to 13th Friday afternoon. Please bring the Holy Bible, Your Mass Diary (Both personal and Parish) and necessary things for your stay.

Yours in Christ,

Rev. Msgr. M. John Nicholas

Vicar General

Holy Father's Intention

For Mental Health Ministry

Let us pray that the mental health ministry be established throughout the Church, helping to overcome the stigma and discrimination of persons with mental illnesses.

கத்தோலிக்க மேய்ப்புப்பணி நிலையம் மறைக்கல்வி - நன்னெறி பாடங்கள் ஆய்வுக்கான கால அட்டவணை அரக்கோணம் & வேலூர் மறைவட்டங்கள் - 2026

அன்பிற்கினிய தாளாளர், தலைமை ஆசிரியர் மற்றும் இருபால் ஆசிரியர் பெருமக்களுக்கு, மேய்ப்புப்பணி நிலையத்திலிருந்து நல்வாழ்த்துக்கள்! மறைக்கல்வி, நன்னெறி பணியில் தாங்கள் செய்துவரும் தியாகம் மற்றும் அயராத உழைப்பைப் பாராட்டி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாணவர்களின் இறைநம்பிக்கை மற்றும் ஒழுக்கநெறி வளர்ச்சிக்காக தாங்கள் மேற்கொண்டு வரும் இப்பணி மிகவும் பாராட்டுக்குரியது. இவ்வாண்டிற்கான மறைக்கல்வி நன்னெறிப் பாடங்களை ஆய்வு செய்ய கீழ்க்கண்ட தேதியில் அருள்முனைவர் அருள் ஜான் போஸ்கோ தலைமையில் மறைமாவட்ட மறைக்கல்வி பணிக்குழு வருகை தர உள்ளது என்பதை இச்சுற்றறிக்கை மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாள்	வேளை	பார்வையிடும் பள்ளியின் பெயர்
8.10.26 வியாழன்	காலை	1. புனித சிறுமலர் பெண்கள் மேனிலைப்பள்ளி, இராணிப்பேட்டை
		2. புனித சிறுமலர் தொடக்கப்பள்ளி, இராணிப்பேட்டை
		3. ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, இராணிப்பேட்டை
		4. புனித தோமா ஆங்கிலப்பள்ளி, சிப்காட்
	பிற்பகல்	5. ஆர்.சி.எம். நடுநிலைப்பள்ளி, ஆலப்பாக்கம்
		6. Anne Marie Matric Hr. Sec. Sch., Kaveripakkam
9.10.26 வெள்ளி	காலை	1. புனித சேவியர் மெட்ரிக்பள்ளி, சோகனூர்
		2. புனித தொன்போஸ்கோ மெட்ரிக் பள்ளி, இச்சிபுத்தூர்
		3. தூய நெஞ்ச மெட்ரிக் மேனிலைப்பள்ளி, அரக்கோணம்
		4. ஆர்.சி.எம். உயர்நிலைப்பள்ளி, பழனிபேட்டை

		5. ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, பழனிபேட்டை
	பிற்பகல்	6. தொன்போஸ்கோ மேனிலைப்பள்ளி, சகாயத்தோட்டம்
		7. ஆர்.சி.எம். நடுநிலைப்பள்ளி, உரியூர்குப்பம்
12.10.26 திங்கள்	காலை	1. புனித மரியன்னை பெண்கள்மேனிலைபள்ளி
		2. புனித மரியன்னை தொடக்கப்பள்ளி, வேலூர்
		3. புனித மரியன்னை ஆங்கில தொடக்கபள்ளி, வேலூர்
	பிற்பகல்	4. புனித தொன்போஸ்கோ உயர்நிலைப்பள்ளி, வேலூர்
		5. புனித தொன்போஸ்கோ தொடக்கப்பள்ளி, வேலூர்
		6. சாவியோ மெட்ரிக் உயர்நிலைப்பள்ளி, வேலூர்
13.10.26 செவ்வாய்	காலை	1. புனித ஜோசப் மெட்ரிக் மேனிலைப்பள்ளி, வேப்பூர்
		2. சிநேக தீபம் மெட்ரிக் மேனிலைப்பள்ளி, அலமேலு ரங்காபுரம்
	பிற்பகல்	3. திருசிலுவை மெட்ரிக் மேனிலைப்பள்ளி, சத்துவாச்சாரி
		4. உத்திரியமாதா நடுநிலைப்பள்ளி, ஓல்டுடவுன்
		5. ஆரோக்கியமாதா ஆங்கிலபள்ளி,ஓல்டுடவுன்
14.10.26 புதன்	காலை	1. குளுனி மெட்ரிக் மேனிலைப்பள்ளி, காட்பாடி
		2. புனித சேவியர் உயர்நிலைப்பள்ளி, காட்பாடி புனித சேவியர் தொடக்கப்பள்ளி, கிறிஸ்டியான்பேட்டை
	பிற்பகல்	4. புனித தொன்போஸ்கோ ஆண்கள் மேனிலைப்பள்ளி, காந்திநகர்
		5. புனித தொன்போஸ்கோ மெட்ரிக் மேனிலைப்பள்ளி, காந்திநகர்
15.10.26 வியாழன்	காலை	1. அக்ஸிலியம் பெண்கள் மேனிலைப்பள்ளி, காந்திநகர்
		2. அக்ஸிலியம் மெட்ரிக்பள்ளி, காந்திநகர்
		3. அக்ஸிலியம் தொடக்கப்பள்ளி, காந்திநகர்
	பிற்பகல்	4. புனித ஜோசப் உயர்நிலைப்பள்ளி, அ.கட்டுபடி

		5. புனித ஜோசப் தொடக்கப்பள்ளி, அ.கட்டுபடி 6. ஆர்.சி.எம். நடுநிலைப்பள்ளி, கணியம்பாடி 7. குழந்தை யேசு மெட்ரிக்பள்ளி, இடையன்சாத்து
16.10.26 வெள்ளி	காலை	3. L.F.C. Matic Hr.Sec.School, Ammoor St. Pio Matric School, Arcot
	பிற்பகல்	இருதய ஆண்டவர் உயர்நிலைப்பள்ளி, செங்காநத்தம்

அக்டோபர் மாத திருமண தயாரிப்பு வகுப்புகள்

3.10.26 - 4.10.26	:	மாதத்தின் முதல் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை
இடம்	:	உலக மாதா ஆலயம், திருவண்ணாமலை
சனிக்கிழமை 3.10.2026	:	காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை
ஞாயிறு 4.10.2026	:	காலை 10.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை
17.10.2026 - 18.10.2026	:	மாதத்தின் மூன்றாம் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை
இடம்	:	வேலூர் ஆயர் இல்லம் (ஜூபிலி ஹால்)
சனிக்கிழமை 17.10.2026	:	காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை
ஞாயிறு 18.10.2026	:	காலை 10.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை

திருமணத்திற்குத் தயாராகும் மணமக்களையும், பெற்றோர்களையும் அனுப்பி வைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மணமக்களுக்கு இரண்டு நாட்கள், பெற்றோர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை மதியம் வரை அரை நாள் வகுப்பு நடைபெறும்.

இறைபணியில் அன்புடன்
அருள்முனைவர். **D. அருள் ஜான் போஸ்கோ**
மேய்ப்புப்பணி நிலையம், இயக்குநர், வேலூர்

வேலூர் சமூக சேவை சங்கம்

02.09.2026 காஞ்சிபுரத்தில் உள்ள கோல்பிங் அலுவலகத்தில் கோல்பிங் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மறைமாவட்ட கோல்பிங் தலைவர் மற்றும் செயலாளர்களுக்கு, "பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு" என்ற தலைப்பில் கோல்பிங் தேசிய இயக்குநர் அருட்பணி. மரிய சூசை தலைமையில் இரண்டு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. இக்கூட்டத்தில் நமது மறைமாவட்டத்திலிருந்து கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் திரு. ஏசுகுமார், மறைமாவட்ட தலைவர் திரு. மைக்கேல், செயலாளர் திருமதி. சாந்தி அகியோர் கலந்துக் கொண்டார்கள். நாம் வசிக்கும் இடங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் வன்கொடுமைகள் பற்றி அருட்சகோதிரி. லூர்துமேரி அவர்கள் எடுத்துரைத்தார்கள். இரண்டாம் நாளில் தேசிய இயக்குநர் தந்தை நமது கோல்பிங் குழுக்களில் நடைபெறும் வன்கொடுமைகள், அதனை தடுக்கும் முறைகள் மற்றும் சட்ட திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார்கள்.

04.09.2026 மோசவாடி பங்கில் பங்குதந்தை அருட்பணி. ஜீவகன் முன்னிலையில் கோல்பிங் ஒருங்கிணைப்பாளர், ஒரு புதிய கோல்பிங் குழுவை உருவாக்கினார். இப்புதிய கோல்பிங் குழுவில் 20 உறுப்பினர்கள் தங்கள் பெயர்களை பதிவு செய்தார்கள். ஒருங்கிணைப்பாளர் கோல்பிங் குழுவின் செயல்பாடுகளையும், இயங்கும் முறைகளையும், சட்ட திட்டங்களையும் விளக்கிகூறினார்.

05.09.2026 ஆற்காடு டவுன் தெருவில் புதிய மகளிர் சங்கம் தொடங்கப்பட்டது. ஒருங்கிணைப்பாளர் திருமதி. செலின், களப்பணியாளர் திருமதி. சகாயமேரி மற்றும் VIT பயிற்சி மாணவர்கள் கலந்துக்கொண்டு தலைமைபண்பு, குழுவை வழிநடத்தும் முறைகள், பதிவேடு பராமரிப்பு ஆகியவை பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது.

09.09.2026 உதயேந்திரம் பங்கில் பங்குதந்தை மற்றும் ஆர்.சி.எம் பள்ளிகளின் மேலாளர் தந்தை ஆகியோர் முன்னிலையில், பெற்றோரை இழந்த பள்ளி மாணவ மாணவியர்களுக்கு தேவையான நோட்டு புத்தகங்கள், எழுதுகோல் மற்றும் சீருடைகள் வழங்கப்பட்டது. இம்முயற்சியினை ஒருங்கிணைப்பாளர் மற்றும் களப்பணியாளர் மேற்கொண்டார்கள்

10.09.2026 திரு. வசந்தகுமார் அவர்கள் வேலூர் சமூக சேவை சங்கத்தின் பணியாளர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு அரசு நலத்திட்டங்கள் குறித்த விளக்க கூட்டம் நடத்தினார். இக்கூட்டத்தில் கணக்காளர் திரு. இராஸ் லூயிஸ் ஒருங்கிணைப்பாளர் திருமதி. செலின் மற்றும் களப்பணியாளர்கள் ஆகியோர் கலந்துக்கொண்டனர். மாற்றுதிறனாளிகளுக்கான திட்டங்கள் பெறுதல், விவசாயிகளின் நலன், மகளிர் குழுக்களுக்கான அரசு திட்டங்கள், அதை பெறுவதற்கான வழிமுறைகள் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது.

12.09.2026 அ.கட்டுப்படி பாங்கில் இயங்கி வரும் விவசாயம் மற்றும் கோல்பிங் குழுக்களுக்கான கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் விவசாயத்தின் தற்போதைய நிலை, தண்ணீர் பற்றாக்குறை, இயற்கை உரம் தயாரித்தல், மண் பரிசோதனை, மாற்று பயிர் செய்தல் குறித்து VIT மாணவர்கள் பயிற்சி அளித்தார்கள். இந்நிகழ்வில் ஒருங்கிணைப்பாளர் மற்றும் களப்பாணியாளர்கள் பங்கேற்றார்கள்.

தொகுப்பு:

திரு. **K.ஏசுகுமார்**	அருட்பணி **M. அமலநாதன்**
கோல்பிங் ஒருங்கிணைப்பாளர்	இயக்குநர், VSSS

Birthday

Rev. Fr. S. Lazar Savarimuthu	02.10.1951
Rev. Fr. D. Arockiasamy	06.10.1978
Rev. Fr. A. Joseph Raja	07.10.1968
Rev. Fr. S. Velankanni	09.10.1986
Rev. Fr. P. Alexander	24.10.1967
Rev. Fr. S. Paularasu	28.10.1977

வேலூர் மறைமாவட்ட பெண்கள் பணிக்குழுவின் பணிகள்

08.09.2026 பெண் குழந்தைகள் தினம் பங்குகளில் கொண்டாடப்பட்டது. அன்றைய நாளில் பெண் குழந்தைகளுக்கான சிறப்பு திருப்பலி நடைபெற்றது. பெண் குழந்தைகளை சார்ந்ததாக திருப்பலி அமைந்தது. திருப்பலி வழிபாட்டு நிகழ்வுகளை பெண் குழந்தைகளே சிறப்பித்தனர். பெண் குழந்தைகள் பற்றிய விழிப்புணர்வும் கொடுக்கப்பட்டது.

09.09.2026 மறைக்கோட்ட பொறுப்பாளர்கள் கூட்டம் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் குழுவின் நோக்கங்கள், செயல்பாடுகள் பற்றி செயலர் அருட்சகோதரி ஜோஸ்பின் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

10.09.2026 நிர்வாக குழுவினர் கூட்டம் நடைப்பெற்றது. செயலர் அருட்சகோதரி ஜோஸ்பின் அவர்கள் இம்மாதத்தில் நடைபெறும் 16-ம் தேதி கூகுல் மறைவட்ட கூட்டம், 18-ம் தேதி நடைபெறும் வேலூர் மறைவட்ட கூட்டம் பற்றிகலந்தாலோசிக்கப்பட்டது.

16.09.2026 வேலூர் மறைகோட்ட பொறுப்பாளர் கூகுல் கூட்டம் நடைபெற்றது. இதில் 7 வட்டத்திலிருந்து பொறுப்பாளர்கள் கலந்துக்கொண்டார்கள். அக்டோபர் மாதத்தில் நாம் செய்யவேண்டியது என்னவென்று கலந்தாலோசித்ததுடன் ஒவ்வொரு பங்கிலிருந்தும் 8 நபர்கள் இந்த குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்றும் வலியுறுத்தப்பட்டது.

18.09.2026 வேலூர் மறைகோட்ட அளவிலான கூட்டம் காந்திநகர் பங்கில் அருட்பணி. கிளமெண்ட் ரொசாரியோ அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் அக்டோபர் மாதத்தில் செய்ய வேண்டிய பணிகள் செய்ய வேண்டிய பணிகள் குறித்து முடிவெடுக்கப்பட்டது. 6 பங்குகளிலிருந்து பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.

தொகுப்பு:
அருள்சகோதரி **C.P.ரோசலின்ட் பால்**
SSAM செயலர், பெண்கள் பணிக்குழு

திருவண்ணாமலை சமூக சேவை சங்கம்

01.09.2026 திருவண்ணாமலை சமூக சேவை சங்க பணியாளர்களுக்கான மாதாந்திர கூட்டம் இன்று காலை 9.30 மணியளவில் நடைபெற்றது. பணியாளர்களின் சென்ற மாத பணிகள் குறித்தும், பணியின் சவால்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. வரும் மாதத்தில் செய்யப்பட வேண்டிய பணிகள் குறித்து திட்டமிடப்பட்டது. பணித்தளங்களில் பணியாளர்கள் செய்ய வேண்டிய பணிகள் குறித்தும், பணியாளர்கள் மாதம்தோறும் தலைமை ஒருங்கிணைப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் குறித்தும் இயக்குநர் அருட்பணி. S.பிரான்சிஸ் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

02.09.2026 TVMSSS இயக்குநர் தந்தை அருட்பணி. S.பிரான்சிஸ் அவர்கள் தச்சாம்பாடி பங்கு மற்றும் மோட்சவாடி பங்கு கிராமங்களில் செயல்படும் மகளிர் குழுக்கள், மாற்றத்தின் கைகள் குழுக்களை நேரில் சென்று சந்தித்து குழுக்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வினை மேற்கொண்டார். தொடர்ந்து இந்த பகுதிகளின் தனிநபர் கழிப்பறை திட்டத்தின் பயனாளிகளை சந்தித்து பணிகளை ஆய்வு செய்தார். விரைவில் இந்த கழிப்பறைகளை கட்டி முடிக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

04.09.2026 TVMSSS இயக்குநர் தந்தை அருட்பணி. S.பிரான்சிஸ் அவர்கள் முனியந்தாங்கல் கிராமத்தில் செயல்படும் மகளிர் குழுக்கள், மாற்றத்தின் கைகள் குழுக்களை நேரில் சென்று சந்தித்து குழுக்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வினை மேற்கொண்டார். தொடர்ந்து இந்த பகுதிகளின் தனிநபர் கழிப்பறை திட்டத்தின் பயனாளிகளை சந்தித்து பணிகளை ஆய்வு செய்தார். விரைவில் இந்த கழிப்பறைகளை கட்டி முடிக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

05.09.2026 கொங்காவரம் பங்குகளில் செயல்பட்டு வரும் மகளிர் குழுக்களை சேத்துப்பட்டு வட்டாரத்தின் பணியாளர் திருமதி. சுமித்தா அவர்கள் குழுக்களை நேரில் சந்தித்து அவர்களின் செயல்பாடுகள், மாதாந்திர சேமிப்பு, அறிக்கை புத்தகங்கள் ஆகியவைகளை ஆய்வு செய்தார். தொடர்ந்து தனிநபர் கழிப்பறை திட்டத்தின் பயனாளிகளை சந்தித்து தனிநபர் கழிப்பறை கட்டுமான பணிகளை ஆய்வு செய்தார். விரைவில் அந்த பணிகளை முடிக்க அறிவுரை வழங்கப்பட்டது.

07.09.2026 திருவண்ணாமலை சமூக சேவை சங்கத்தின் சார்பில் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் கீழ் செம்மியமங்கலம் பங்கு மற்றும் அதன் கிளை கிராமங்களில் இயக்குநர் தந்தை அருட்பணி. S.பிரான்சிஸ் மற்றும் பங்குத்தந்தை அருட்பணி. டேனியேல் சர்மா அவர்கள் தலைமையில் 2000 பனை விதைகள் வழங்கப்பட்டு விதைகளை நடும் பணி மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் கிராம மக்கள் பங்கேற்று ஆர்வமுடன் நிலங்களை சீர்படுத்தி மரக்கன்றுகளை நட்டு தொடர்ந்து பராமரிப்பதாக உறுதியளித்தனர்.

12.09.2026 திருவண்ணாமலை சமூக சேவை சங்கம் மற்றும் சிகரம் தொண்டு நிறுவனம் இணைந்து We Lead திட்டத்தில் உடன் பயனிக்கும் தொண்டு நிறுவனங்களின் இயக்குநர் மற்றும் களப்பணியாளர்களுக்கான வலுவூட்டல் ஒரு நாள் பயிற்சி திருவண்ணாமலை சமூக சேவை சங்கத்தில் நடைபெற்றது. இந்த பயிற்சியில் பெண்கள் தங்களது உரிமைகள் மற்றும் பொறுப்புகளை அறிந்து கொண்டு, குடும்பம், சமூகம் மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்தில் தன்னம்பிக்கையுடன் பங்கேற்பையும், தலைமைத்துவப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதையும் ஊக்குவிக்கும் வகையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த கூட்டத்தில் 6 நிறுவனங்களின் இயக்குநர்கள் மற்றும் களப்பணியாளர்கள் என 30 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதியாக இயக்குநர் அருட்பணி. S.பிரான்சிஸ் அவர்கள் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

20.09.2026 TVMSSS இயக்குநர் தந்தை அருட்பணி. S.பிரான்சிஸ் அவர்கள் போளூர் வட்டாரத்தில் செயல்படும் மகளிர் குழுக்கள், மாற்றத்தின் கைகள் குழுக்களை நேரில் சென்று சந்தித்து குழுக்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வினை மேற்கொண்டார். தொடர்ந்து இந்த பகுதிகளின் தனிநபர் கழிப்பறை திட்டத்தின் பயனாளிகளை சந்தித்து பணிகளை ஆய்வு செய்தார். விரைவில் இந்த கழிப்பறைகளை கட்டி முடிக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

23.09.2026 திருவண்ணாமலை சமூக சேவை சங்கத்தின் சார்பில் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் கீழ் மோட்சவாடி பங்கு மற்றும் அதன் கிளை கிராமங்களில் இயக்குநர் தந்தை அருட்பணி. S.பிரான்சிஸ் மற்றும் பங்குத்தந்தை அருட்பணி. ஜீவகன் அவர்கள் தலைமையில் 2500 பனை விதைகள் மற்றும் 130 தென்னை

மரங்கள், 60 செம்மர கன்றுகள், 100 மகாகனி கன்றுகள், 30 பழவகை கன்றுகள் நடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் கிராம மக்கள் பங்கேற்று ஆர்வமுடன் நிலங்களை சீர்படுத்தி மரக்கன்றுகளை நட்டு தொடர்ந்து பராமரிப்பதாக உறுதியளித்தனர். இறுதியாக ஒருங்கிணைப்பாளர் திருமதி. சுமித்தா அவர்கள் நன்றிகூற கூட்டம் நிறைவு பெற்றது.

26.09.2026 திருவண்ணாமலை சமூக சேவை சங்கம் மற்றும் சிகரம் தொண்டு நிறுவனம் இணைந்து We Lead திட்டத்தின் சார்பில் ஆண்கள் ஆதரவு குழுக்களுகான ஒரு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மோட்சவாடி, தும்பூர், கொங்கப்பட்டு, சாணிப்பூண்டி, ஜமின்கூடலூர் ஆகிய கிராமங்களில் இருந்து 30 ஆண்கள் பங்கேற்று சிறப்பித்தனர். இந்த கூட்டத்தில் பெண்கள் தங்கள் சமூகம் மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்தில் தன்னம்பிக்கையுடன் பங்கேற்கவும், தலைமைத்துவப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில் ஆண்கள் தங்களது ஆதரவினை அளித்து பெண்களின் வளர்ச்சியில் உறுதுணையாக செயல்பட வேண்டும் என ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

29.09.2026 திருவண்ணாமலை சமூக சேவை சங்கத்தின் கீழ் செயல்படுகின்ற விவசாய சங்க பொறுப்பாளர்களுக்கான ஆலோசனை கூட்டம் TVMSSS கருத்தரங்கில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு சேத்துப்பட்டு, போளூர், வேட்டவலம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மறைக்கோட்டங்களில் உள்ள விவசாய பொறுப்பாளர்கள் பங்கிற்கு 2 நபர்கள் வீதம் கலந்துகொண்டு சிறப்பித்தனர். TVMSSS இயக்குநர் தந்தை அருட்பணி. S.பிரான்சிஸ் அவர்கள் விவசாய சங்கங்களின் செயல்பாடுகளை கேட்டறிந்தார். தொடர்ந்து விவசாயிகளுக்கான அரசு நலத்திட்டங்களை பற்றி எடுத்துக்கூறி அவற்றை நாம் எவ்வாறு பெற்று பயன்பெறுவது என்பது குறித்தும் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. கூட்டத்தில் பங்கேற்ற அனைவருக்கும் மதிய உணவு அளிக்கப்பட்டது.

செய்தி தொகுப்பு

திருமிகு. L.T. **இன்பசேகர்**
TVMSSS திட்ட மேலாளர்

அருட்பணி. **S. பிரான்சிஸ்**
இயக்குநர் TVMSSS

திருவிவிலிய பணிக்குழு வேலூர் மறைமாவட்டம் நடத்திய மாபெரும் திருவிவிலிய மாநாட்டின் அறிக்கை 2026

"கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி உங்களுக்குள் நிறைவாகக் குடிகொள்வதாக" கொலோ 3:16 என்ற இறைவசனத்தை மைய வசனமாகக் கொண்டு இந்த ஆண்டு 2026 செப்டம்பர் மாதம் திருவிவிலிய மாதமாகவும், 27.09.2026 அன்று திருவிவிலிய ஞாயிறாகவும் "இதயத்திலும் இல்லத்திலும் இறைவார்த்தை" என்ற மையத்தலைப்பில் இறைவார்த்தை கொண்டாட்டத்தை கொண்டாட தமிழக திருவிவிலிய பணிக்குழு ஒவ்வொரு மறைமாவட்டத்திற்கும் சிறப்பு அழைப்பை கொடுத்திருக்கிறது. இந்த அழைப்பிற்கிணங்க, நமது வேலூர் மறைமாவட்டத்தில் "திருவிவிலியமும் குடும்ப நல்வாழ்வும்" என்ற மையத்தலைப்பில் மாபெரும் திருவிவிலிய மாநாடு 13.09.2026 அன்று வேலூர் தூய விண்ணேற்பு அன்னை பேராலயத்தில் வேலூர் திருவிவிலிய பணிக்குழுவினால் ஒருங்கிணைத்து மிகவும் அர்த்தமும் மற்றும் பயனுள்ள விதத்தில் சிறப்புற நடத்தப்பட்டது.

இம்மாநாட்டிற்கு தலைமைத்தாங்கிய வேலூர் மறைமாவட்ட ஆயர். மேதகு அம்புரோஸ், அவர்கள் "திருவிவிலியம் ஒவ்வொரு குடும்பத்தின் மையமாகவும், உயிர்நாடியாகவும் அமைய வேண்டும்" என்று இறைவார்த்தை ஆசீர் வழங்கி திருவிவிலிய பவணியை செயின்ட் மேரிஸ் பள்ளி வளாகத்தில் இருந்து துவக்கி, மாநாட்டின் ஆசீயுரையும் வழங்கினார். பல ஆண்டுகளுக்குப் பிறகு நடத்தப்பட்ட இந்த திருவிவிலிய மாநாடு நிச்சயம் நமது மறைமாவட்டத்தில் இருக்கக்கூடிய பொதுநிலையினரை திருவிவிலியத்தின் மீது ஆர்வத்தை உண்டாக்கும். இதற்கு பெரிதும் உழைத்த அருட்பணி. ஆ.குழந்தையேசு, செயலர், திருவிவிலிய பணிக்குழு அவர்களையும், அவரோடு இணைந்து உழைத்த அனைத்து திருவிவிலிய பணிக்குழு பொறுப்பாளர்களையும் ஆயர் தந்தை வெகுவாக பாராட்டி ஆசீரும் அளித்தார்.

இந்த திருவிவிலிய மாநாட்டினை தமது செப உதவியால் பேரருட்தந்தை. ஜான் நிக்கோலாஸ், VG, வேலூர் மறைமாவட்டம் அவர்கள் ஆசீர்வதித்தார். திருவிவிலிய பவணி செயின்ட் மேரிஸ் பள்ளியிலிருந்து துவங்கி இறைவார்த்தை இடிமுழக்கத்தோடு அனைத்து மக்களையும் ஆற்றல் வாய்ந்த சக்தியாக தம்பால் ஈர்த்தது. பேராலய நுழைவாயில் வந்தடைந்தவுடன், பேரருட்தந்தை முனைவர். ராய் லாசர், பேராலய அதிபர். வேலூர் அவர்கள் திருவிவிலியத்தை பெற்றுக்கொண்டு

பேராலய பீடத்தில் வைத்து, இறைவார்த்தை அஞ்சலி செலுத்தினார். அதோடு "பல்வேறு நவீன மற்றும் ஊடகத்தின் ஊடுருவலால் சிக்கித் தவிக்கும் குடும்பங்களை இறைவார்த்தை செம்மையாக்கும், வளமாக்கும், நலமாக்கும்" என்றுச் சொல்லி ஊக்கப்படுத்தினார்.

இந்த மாநாட்டிற்கு சிறப்புரையாளராக பேரருட்தந்தை. முனைவர். மைக்கேல் ராஜ். தமிழக திருவிவிலிய பணிக்குழு இயக்குனர் திண்டிவனம் அவர்கள் மிகவும் சிறப்பாக, எளிமையாக, எல்லோரும் இறைவார்த்தையை புரிந்துகொள்ளும் விதத்தில் தமது சிறப்புரையாற்றினார்.

சிறப்புரையின் முக்கிய கருத்தாக: இறைவார்த்தைக்கு செவிகொடுக்க வேண்டும் "இஸ்ரயேலே, செவிகொடு!" (இச 6:4). செவிகொடுத்தல் என்பது உற்றுக்கேட்டலாகும், நெஞ்சிலும், நினைவிலும், நம் குடும்பத்திலும் நிலைநிறுத்த வேண்டும் (இச 11:18), இறைவார்த்தையை இதயத்தில் எழுத வேண்டும் (எரே 31:33). இதயத்திலிருந்து இல்லத்திற்கு இறைவார்த்தையை எடுத்துச் செல்ல வேண்டும் (லூக் 8:21). இறைவார்த்தையை பெற்றுக்கொண்ட இல்லங்கள், குடும்பங்கள் இறையாசீர் சுடராய் ஒளிரும்! (திபா 119:105) என்று திருவிவிலியத்தின் வழியாக குடும்ப நல்வாழ்வு அமைக்க தந்தையின் சிறப்புரை மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. குறிப்பாக இறைவார்த்தையின் வழியாக பெற்றோர்கள் பிள்ளைகளை நல்வழிப்படுத்துவது அவர்களின் கடமை (இச 6:7) என்பதனையும் மிகவும் ஆழமாக தெளிவுப்படுத்தினார். இறுதியாக குடும்ப ஆசீர் செபத்தோடு தமது சிறப்புரையை நிறைவு செய்தார்.

மறைமாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்து குடும்பங்கள் மற்றும் இறைமக்கள் என ஏறக்குறைய 320 நபர்கள் இந்த மாபெரும் திருவிவிலிய மாநாட்டில் பங்குபெற்று, பயன்பெற்றார்கள். இந்த மாநாட்டின் வெற்றிக்கனியாக "திருவிவிலியத்தை குடும்பங்களில் படிப்பதனால் ஏற்படும் 10 பயன்கள்" அடங்கிய இறைஇரக்க ஆண்டவர் படமும் "மாநாட்டின் வாழ்வின் நினைவாக" அனைவருக்கும் வழங்கப்பட்டது.

இந்த மாநாட்டிற்கு, எல்லா விதத்திலும் உழைத்த, பொருள் மற்றும் அருளுதவிகள் வழங்கிய இறைமக்களுக்கும், அவர்களை பங்கெடுக்கச்

செய்து தாமும் பங்கேற்ற அனைத்து பங்குத் தந்தையர்களுக்கும், அனைத்து நன்கொடையாளர்களுக்கும், சிறப்பாக மாநாட்டிற்கான உணவினை வழங்கி சிறப்பு செய்த பேராலய அதிபர் பேரருட்பணி. ராய் லாசர், வேலூர் கத்தீட்ரல் பங்குப்பேரவை மற்றும் இறைமக்களுக்கும், அனைத்து விதங்களிலும் உதவிய திருவிவிலிய பணிக்குழு பொறுப்பாளர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை சமர்பித்து இறைவார்த்தை இறையாசீரை எந்நாளும் உரித்தாக்கிமகிழ்கின்றேன்.

இறைவார்த்தை இறையாசீருடன்
அருட்பணி. **ஆ.குழந்தையேசு**
செயலர், வேலூர் மறைமாவட்டம்.

Necrology

Rev. Fr. Joseph Parampet	01.10.1989
Rev. Fr. P. K. Antony SDB	02.10.1983
Rev. Fr. J. Martin SDB	03.10.1986
Rev. Fr. V. P. Antony Samy	03.10.2000
Rev. Fr. A. Devadoss	04.10.1989
Rev. Fr. Edward Giterrez SDB	08.10.1976
Rev. Fr. R. Fathimanathan	10.10.2020
Rev. Fr. Maggioni SDB	21.10.1983
Rev. Fr. Mary Sochi SDB	24.10.1974
Rev. Fr. Henry Remeri SDB	24.10.2000
Rev. Fr. G. Antony Adimai	24.10.2010
Rev. Msgr. Menezes	26.10.1994
Rev. Fr. Varghees SDB	27.10.1983
Rev. Fr. Jose M. Lawrence	27.10.2003
Rev. Bro. Xavier Savarimuthu SDB	28.10.1967
Rev. Fr. V.C.Joseph	31.10.2015

VELLORE CRI DESK

Reverend Fathers, Sisters and Brothers of the CRI Vellore Diocese,

As Pope St. John Paul II reminded us, "To recite the Rosary is nothing other than to contemplate the face of Christ with Mary." As we are in the month of October, the Church invites us to deeply honour our Blessed Mother Mary through the Holy Rosary. The Rosary remains a powerful prayer for peace, spiritual renewal, and unity within our communities. We cordially invite the CRI Vellore Diocese to lead and animate this special Month of the Rosary. To foster deeper local participation, we request these animations be organized at your respective vicariate levels. Your leadership in coordinating vicariate prayer services and processions will greatly enrich the local faithful. May our Lady of the Holy Rosary intercede for your ministries and bless your communities abundantly.

Wishing you all a deeply grace-filled, prayerful, and blessed Month of the Rosary ahead.

Information :

1. CRI Vellore Team has planned to disseminate the Pope's FIRST encyclical 'Magnifica Humanitas', (Magnificent Humanity) at the Vicariate level (Clusters: Tirupattur, Vellore & Polur).

2. We have been invited to participate in the workshop on the theme 'Role of Religious in the Synodal Journey: A Sacred Call and Opportunity,' jointly conducted by Streevani and CRI Chengalpattu, Pondicherry, and Vellore Teams on 21 & 22 November 2026 in Pondy Diocese.

Rev. Fr. Deva Joe SDB
President

வேலூர் மறைமாவட்டம்
தொழிலாளர் நல பணிக்குழு

சுற்றறிக்கை
அன்பிற்கினிய அருட்தந்தையர்களே,

இறைவனின் அருளும் சமாதானமும் தங்களோடு இருப்பதாக!

வேலூர் மறைமாவட்ட தொழிலாளர் நல பணிக்குழு, தொழிலாளர்களின் நலன், உரிமைகள், சமூகப் பாதுகாப்பு மற்றும் மனித மாண்பை மேம்படுத்தும் நோக்குடன் செயல்பட்டு வருகிறது. இப்பணியை பங்கு அளவில் சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல, ஒவ்வொரு பங்கிலிருந்தும் சமூக அக்கறை கொண்டவர்களையும் தொழிலாளர் நலப் பணிகளில் ஆர்வமுள்ளவர்களையும் அடையாளம் கண்டு பணிக்குழுவில் இணைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பணிக்குழு உறுப்பினர்கள் தொழிலாளர் உரிமைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், அரசு நலத்திட்டங்கள் பற்றிய தகவல்களை மக்களிடம் கொண்டு சேர்த்தல், தொழிலாளர்களின் தேவைகளை அறிந்து உரிய வழிகாட்டுதல் வழங்குதல் போன்ற பணிகளில் பங்கெடுப்பார்கள்.

எனவே, தங்கள் பங்கிலிருந்து தகுதியும் விருப்பமும் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் பெயர், முகவரி மற்றும் தொடர்பு விவரங்களை தொழிலாளர் நல பணிக்குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தங்களின் ஒத்துழைப்பிற்கும் ஆதரவிற்கும் நன்றியுடன்.

இறையாசீருடன்,
அருட்பணி. **ஜோனாஸ் பிலோமின் தாஸ்**
இயக்குநர்
தொழிலாளர் நல பணிக்குழு
தொடர்புக்கு : 9791860029

மரியாயின் சேனை

"நம்மை மீட்பதற்காக தன் தாயை மிகவும் நேசிக்கும் நமது மீட்பராகிய இயேசுவின் திருஇதயத்தை தொடுவதற்கு செபமாலை தான் மிக வலிமையான ஆயுதம்". - புனித லூயிமரிதே மோன்ட்போர்ட்

சேனையின் இராக்கினியாம் அன்னை மரியாளின் நாமத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். மரியன்னையின் பக்தர்கள் அனைவருக்கும் அன்னையின் பிறப்பு பெருவிழாவினை கொண்ட செப்டம்பர் மாதம் மகிழ்ச்சி தரும் மாதமாக அமைந்தது. 13.09.2026 ஞாயிறு வழக்கம்போல் கொமிந்சியக் கூட்டம் நடைபெற்றது. வருகின்ற அக்டோபர் 18ம் தேதி சேத்துப்பட்டு மாதா மலையில் நடக்கவுள்ள மரியன்னை மாநாட்டிற்கான ஏற்பாடுகள் அனைத்தும் சிறப்பாக நடைப்பெற்றுக் கொண்டிருக்கிறது. 30.08.2026 ஞாயிறு பகல் 12.00 மணியளவில் நமது பக்தசபை இயக்குநர் அருட்பணி யேசுதுரை அடிகளாரின் தலைமையில் கொமிந்சிய அலுவலர்கள் அனைவரும் வேலூர் மறைமாவட்ட ஆயர் மேதகு முனைவர் அம்புரோஸ் பிச்சைமுத்து ஆண்டகையை சந்தித்து மாநாட்டிற்கான முதல் அழைப்பிதழை கொடுத்து ஆசீர் பெற்றோம். மாநாட்டிற்கான நிகழ்வுகளை கேட்டறிந்ததோடு சேனையின் வளர்ச்சியை குறித்து சில ஆலோசனைகளையும் ஆயர் தந்தை அவர்கள் வழங்கினார். கொமிந்சியத்தின் சார்பாக அனைத்து கியூரியா மற்றும் நேரடி பிரசிடிய ஆன்ம ஆலோசகர் தந்தையர்களுக்கும் பக்தசபை இயக்குநரின் கடிதம் மற்றும் விழா அழைப்பிதழ் கொடுக்க நிர்வாக சபை அலுவலர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. கொமிந்சியக் கூட்டத்தின் போது பக்தசபை இயக்குநர் தந்தை அவர்கள் மாநாட்டிற்கான நிகழ்வுகள் அனைத்தையும் சேனையர்களுக்கு தெளிவாக எடுத்து கூறினார். அடுத்த மாத கொமிந்சியக் கூட்டம் 11.10.2026 பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும். மாநாட்டிற்கான பாடல் மற்றும் நடன ஒத்திகை பகல் 12.00 மணிக்கு ஆரம்பமாகும்.

சென்றமாத சந்திப்பு :	கியூரியா - காட்பாடி (ஆச்சேஸ் விழா 6.9.26) வேட்டவலம் (ஆச்சேஸ் விழா 6.9.26) ஆரணி 5.9.26
நேரடி பிரசிடியம்	- வேலூர் பெண்கள் பிரசிடியம் (பிரசிடிய விழா 9.9.26)

மரியே வாழ்க
கா. மெரின்டோ ப்ரணான்டோ
து. தலைவர், வேலூர் கொமிந்சியம்

REV. FR. S. JOSE ENCHAKAL

(03.01.1948 – 24.09.2026)

Ordination Motto: *"My soul proclaims the greatness of the Lord; my spirit rejoices in God my Saviour."* (Luke 1:46-47)

BIO-DATA

Early Life

Rev. Fr. S. Jose Enchakal was born on 3rd January 1948 in St. George's Parish, Koodalappadu, Edavoor village, in the Diocese of Ernakulam, Kerala, as the second son among the eight children of Mr. Sauro and Mrs. Rosammal. He had one elder brother, two younger sisters and four younger brothers.

Education, Formation and Ministry

1953 Began his schooling from Class I at Upper Primary School, Edavoor.

1964 Pursued the B.Sc. degree at Sree Sankara College, Kalady, Kerala.

1967 – 1975 Joined the Vincentian Congregation of Cuttack, Orissa; completed his philosophical studies at St.

	Joseph's Pontifical Seminary, Alwaye and studied theology for two years.
1976	Sought permission from Most. Rev. Antony Muthu, Bishop of Vellore, to continue his studies and to serve in the priestly ministry for the Diocese of Vellore.
1976–1979	With the permission of the Bishop, resumed and completed his theological studies at St. Paul's Seminary, Tiruchirappalli. **06.04.1979** Ordained Deacon by Most Rev. Antony Muthu, Bishop of Vellore. **10.05.1979** Ordained Priest by Most Rev. Antony Muthu at St. George's Church, Koodalappadu Parish, his native place in Kerala. **19.09.1979**Assistant Parish Priest, St. Francis Xavier Parish, Zamin Gudalore.
1980–1982	Parish Priest, St. Dominic Savio Parish, Thirumalai.
1983	Medical leave.
1985–1989	Parish Priest, Christ the King Parish, Nelliyankulam.
1989–1990	Served at the Catholic Health Association of India (CHAI), Secunderabad.
1990–1995	Parish Priest, Our Lady Queen of Heaven Parish, Boodhamangalam.
1995–1996	Parish Priest, Our Lady of Presentation Parish, Perunthuraipet.
2004	Secretary, Labour Welfare Commission, Diocese of Vellore.
2013	Served as an Advocate at the High Court of Madras, Chennai.

Significant Contributions

Among the many services rendered by Rev. Fr. S. Jose Enchakal, the following stand out :

- He awakened the people of Perunthuraipet Parish to the need for social development and progress.
- He organised the women of the parish into an association and led a successful campaign against liquor.
- He gave due importance to the Dalit community in local body elections and initiated their representation in public life.
- He emerged victorious in the struggle for land rights.
- Driven by a thirst for liberation and a deep sense of social awareness, he founded the Mannin Maindhar Viduthalai Iyakkam (Sons of the Soil Liberation Movement).
- He carried out his ministry with social consciousness and deep spiritual love.

Return to the Father's House

Having served with great distinction as a priest for 47 years, Rev. Fr. S. Jose Enchakal returned to the Lord in his 78th year, on Thursday, 24th September 2026, at about 12.45 p.m.

Eternal rest grant unto him, O Lord and let perpetual light shine upon him. May he rest in peace. Amen.

Clergy Enhancement Programme | 10th September 2026

Bible Convention | 13th September 2026


"Do Small Things With Great Love."
100 Years of St. Thérèse's
Canonization! Relic of
St. Thérèse of Lisieux
Saint Francis of Assisi